பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

A/L
இரசாயனவியல்
(திங்கள், புதன்)
By
சண்முகசுந்தரம்
2-30 — 4-00 p.m.
சேதனஇரசாயனம்
4-00 — 5-30 p.m.
பொது இரசாயனம்
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2

A/L
கணித வகுப்பு
(சனி, ஞாயிறு)
By
வெக்டர்
89 BATCH
8 30 — 10 30 a.m.
90 BATCH
12-45 — 2 45 p.m.
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை

சுடர்: 3 யாழ்ப்பாணம் | விபவ ஆண்டு புரட்டாதி மீ 21 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 25 (07 - 10 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 203

# கூட்டணி, ரெலோவும் தேர்தலில் போட்டியிடா

## உத்தியோகபூர்வமாக நேற்று அறிவிப்பு

கொழும்பு, அக்டோபர் 7

**உத்தேச வடக்கு — கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ் ஈழ விடுதலை இயக்கமும் (ரெலோவும்) அறிவித்துள்ளன.**

தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்றுக் கொழும்பில் உத்தியோக பூர்வமாக விடுத்த அறிக்கையில் தமது கட்சி தேர்தலில் கலந்து கொள்ளாது என்று தெரிவித்தது.

தமிழ்ஈழ விடுதலை இயக்கம் தேர்தலில் கலந்து கொள்ளாது என்று அதன் தலைவர் அறிவித்ததாக இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் (புளொட்டும்) தான் தேர்தலில் பங்குபற்றப் போவதில்லை என ஏற்கெனவே அறிவித்தது தெரிந்ததே.

தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்று கொழும்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

"தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கொள்கையை (Concept) நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால் பிரதான தமிழ்ப் போராளிகள் இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் வடக்கு – கிழக்கு மாகாணத்தில் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் இச் சமயத்தில் எம்மால் வேட்பாளர்களை நிறுத்த முடியாது. வன்செயலில் ஈடுபடாத (Non-Violent) எமது கட்சி, தற்போதைய சூழ்நிலையில் வேட்பாளர்களை நிறுத்துவது கஷ்டமான காரியம்

ஆனால் வடக்கு-கிழக்கு மாகாண மக்கள் தேர்தலை பகிஷ்கரிக்கக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ் போட்டியிடுவது நிச்சயம்

### வரதராஜப்பெருமாள் அறிவிப்பு

கொழும்பு, அக் 7

வடக்கு,கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் நிச்சயமாக ஈ. பி. ஆர். எல். எவ் போட்டியிடும்.

ஈ.பி ஆர்.எல்.எவ். இயக்க பிரமுகரான திரு. வரதராஜப் பெருமாள் நேற்று இதைத்தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டது.

நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்ப—

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவுக்கு கறுப்புக்கொடி: நெடுமாறன் கைதானர்

அண்மையில் மதுரைக்கு விஜயம் செய்த பிரதமர் ராஜீவ் காந்திக்கு கறுப்புக்கொடி காட்டுவதற்காக, காமராஜ் காங்கிரஸ் தலைவர் ப. நெடுமாறன் தனது தொண்டர்களுடன் ஊர்வலமாகச் சென்றபோது பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

மதுரை மேற்குச் சித்திரை வீதியில் உள்ள தனது கட்சி அலுவலகத்தில் இருந்து அவரும் மற்றும் தொண்டர்களும் கறுப்புக் கொடிகளுடன் புறப்பட்டுச்சென்றனர்.

அப்போதேகைதுசெய்யப்பட்டனர்.

இதுபோன்று கறுப்புக் கொடி காட்ட முயன்ற மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்கள் நூற்றுக்கணக்கானோர் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலை நடத்தத் தாமதப்படுத்துவதைக் கண்டித்தும் மதுரை நகரில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. [ஒ–எ]

## நியமனப் பத்திரம் தாக்கல்; மாற்று ஏற்பாடுகள் தேவை

### என்கிறது ஈ. பி. ஆர். எல். எவ்.

வவுனியா, அக் 7

"நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கு கச்சேரி திறக்கப்பட வேண்டும், அல்லது நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்குமாற்று ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இது இலங்கை அரசின் பொறுப்பாகும். இதிலிருந்து அரசாங்கம் தவறுமானால், மாகாண சபைத் தேர்தலை நடத்த இலங்கை அரசாங்கத்திற்கு விருப்பமில்லை என்றே கருத வேண்டியுள்ளது.

இவ்வாறு ஈ. பி ஆர் எல். எவ். வவுனியா பொறுப்பாளர் எஸ். வெற்றிவேலு தற்போதைய நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வது தொடர்பாக நிலவும் நிலைமைகள் குறித்து பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியாவின் 7 பேர் தெரிவுக்காக 13 பேரின் பட்டியல் இப்போது எம்மிடம் ஆயத்தமாக உள்ளது. வேட்பாளர்களுக்கு உத்தியோகபூர்வமான பாதுகாப்பு வழங்கப்படுமானால் பொது மக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்களை நாம் தாக்கல் செய்வோம்

எமது வேட்பாளர்களின் பாதுகாப்புப் பொறுப்பை ஈ பி ஆர். எல். எப். பொறுப்பேற்க நேரிடும் பட்சத்தில் உறுப்பினர்களிலிருந்து ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ள பெயர்களையே தாக்கல் செய்யவுள்ளோம்

தேர்தல் நடைபெறுமானால் தேர்தலில் ஈ. பி. ஆர் எல்.எவ். பங்குபற்றவே உள்ளது என்றார். (ஒ-164)

## யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்கள் முற்றுமுழுதாக மூடப்படுமா?

கொழும்பு, அக் 7

யாழ் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்கள் முற்றாக மூடப்படுமா?

தென்னிலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் இதுவரை நடைபெற்றுவந்த பட்டப்பின் படிப்பு வகுப்புகளும் கூடிய விரைவில் நிறுத்தப்பட உள்ளதாகத் தெரியவருகிறது

கடந்த ஒரு வருகாலமாக இப்பல்கலைகழகங்கள் மூடப்பட்டிருந்த போதும் பட்டப்பின் படிப்பு வகுப்புகள் மாத்திரம் நடைபெற்றுவந்தன.

இவையும் கூடிய விரைவில் அச்சுறுத்தல் காரணமாக நிறுத்தப்பட உள்ளதாகத் தெரிகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

7-10-1988
புரட்டாதி 21
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
06 02 முதல் 07.32 வரை
ராகு காலம்:
10 32 முதல் 12.02 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### மாணவர் கைதாவதைக் கண்டித்து

## யாழ். நகரத்திலும் சுன்னாகம் பகுதியிலும் இன்று மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், அக் 7

கடந்த 29 ஆம் திகதி அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்ட ஸ்ரான்லிக் கல்லூரி மாணவன் கமலதாஸ் நேற்று விடுவிக்கப்பட்டார்.

இதேவேளை அதே கல்லூரியைச் சேர்ந்த மற்றொரு மாணவரான சிவபாதவிருதயர் கைதாகியுள்ளார்.

அதைவிட கடந்த 3 ஆம் திகதி இணுவில், சைவமகாஜனக் கல்லூரி மாணவனான கண்ணன் அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவற்றைக் கண்டித்து யாழ்ப்பாணம் மாணவர் ஒருங்கிணைப்புக் குழு, யாழ் மாநகரப் பாடசாலை மாணவர்களும்,

(6 ஆம் பக்கம் பார்கக)

### சாளம்பைக் குளத்தில்

## முஸ்லிம் இளைஞர் சுடுபட்டு மரணம்

வவுனியா அக். 7

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா சாளம்பைக்குளம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் கொலையுண்டார். அவர் முஸ்லிம் இளைஞர் என்றும், பெயர் ஜபார் (20) எனவும் சொல்லப்படுகிறது.

செவ்வாயன்று காலை பூவரசங்குளம் முகாமிலிருந்து லொறி ஒன்றில் ரோந்து வந்த இந்திய அமைதிப் படையினரே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக அறிய வருகிறது.

ஜகுபாருடன் கூட

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி மாளி



றெனி எப்படியோ அதிர்ஷ்டசாலி தான் போங்கோ....! பழைய பதவி கிடைச்சிட்டுது பாத்தியளே...!

## 6 பேர் கொலை

தென்மாகாணத்தில் தீவிரவாதிகளினால் கடந்த புதன்கிழமை மட்டும் 6 பேர் கொல்லப்பட்டனர்.

இவர்களில் மூவர் பொலீஸார், 2 பேர் பொதுமக்கள் ஒருவர் கிராம நிர்வாகஅதிகாரி.

## புளத்சிங்கள எம்.பி.யாக றெனியே நியமிக்கப்படுவார்

### சுதந்திரக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, அக். 7

புளத்சிங்கள தொகுதியின் புதிய எம். பியாக மீண்டும் திரு றெனி டி மெல்லையே நியமிக்கப் போவதாக சுதந்திரக் கட்சி அறிவித்திருக்கிறது.

புளத்சிங்கள தொகுதியின் புதிய எம்.பியை நியமிக்கும் உரிமையை சுதந்திரக்கட்சிக்கு தேர்தல் ஆணையாளர் வழங்கியிருப்பது குறித்து ஐ.தே. க தலைவர் ரஞ்சன் விஜயரத்ன அதிருப்தி தெரிவித்தார்.

புளத்சிங்கள தொகுதியின் எம் பியாக இருந்த திரு றெனி டி மெல் யு என் பியில் இருந்து விலகி சுதந்திரக் கட்சியில் சேர்ந்தார், அதன் பின்னர் திரு. றெனி டி மெல் எம். பி பதவியை ராஜினமாச் செய்தார்,

அதன் பின்னர்தான் தேர்தல் ஆணையாளர், புளத்சிங்கள தொகுதிக்கு புதிய எம்.பியைத் தெரிவிக்கும்படி சுதந்திரக் கட்சியைக் கேட்டிருக்கிறார். (ஒ–எ)

## 795 பஸ் சேவை மீண்டும் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம் அக் 7

795 பாதை பஸ் சேவை மீண்டும் நாளை ஆரம்பிக்கப்பட உள்ளது.

சருகப்பனை, கீரிமலை மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்தச் சேவை மீண்டும் நடத்தப்படுவதாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து

# சாகும்வரை உண்ணாவிரதமிருக்க ராஜீவுக்கு கிட்டு முன்னறிவிப்பு

## 10 ஆம் திகதிவரை அவகாசம் தெரிவித்துக் கடிதம்

சென்னை, அக்டோபர் 07

★ குற்றம் செய்திருப்பின் எம்மீது வழக்குத் தொடரவேண்டும்.

★ இல்லையேல் எம்மை விடுதலை செய்து தமிழீழம் கூட்டிச்சென்று போராளிகளிடம் ஒப்படைக்க வேண்டும்

இந்த இரண்டு கோரிக்கைகளையும் முன்வைத்துத் தான் சென்னை மத்திய சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்திக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இம்மாதம் பத்தாம் திகதி காலை ஒன்பது மணிவரையில் அவகாசம் கொடுத்திருக்கிறார் திரு. கிட்டு.

03 - 10 - 1988 அன்று சென்னை மத்திய சிறைச்சாலை சுப்பிரின்டன் ஊடாக திரு கிட்டு அவர்களால் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குப் பிரஸ்தாப கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதன் பிரதிகள் இந்திய ஜனாதிபதிக்கும். சுப்பிரீம் கோர்ட் நீதிபதிக்கும், தமிழ்நாடு ஆளுநருக்கும் அனுப்பிவைக்கப்பட்டன

கடிதத்தின் விவரம் வருமாறு:—

'தமிழ்ப்பேசும் மக்களுக்கு அமைதியையும், சௌகரியத்தையும் ஏற்படுத்தும் முகமாக இந்திய அரசின் பிரதிநிதிகளுடன் நாம் நடத்திவந்த பேச்சுவார்த்தைகள் இடையில் முறிக்கப்பட்டது துரதிர்ஷ்டவசமானது.

இப் பேச்சுவார்த்தையில் தமிழ்பேசும் மக்களின் சார்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ பிரதிநிதியாகக் கலந்து கொண்டேன்.

பேச்சுவார்த்தையில் ஏற்படும் இணக்கத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர், சுண்டுக்குளியை கலக்கிய துப்பாக்கி வேட்டுக்கள்!

யாழ்ப்பாணம், அக் 7

நேற்று மாலை 4-30 மணியளவில் தொடர்ச்சியாகக் கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்களினால் சுண்டுக்குளி, நல்லூர் பகுதிகளும் அதனை அண்டிய பகுதிகளும் பெரும் பதற்றத்துக்கு உள்ளாகின:

இந்தத் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் விட்டுவிட்டும் தொடர்ச்சியாகவும் சுமார் 15 நிமிடங்கள் வரை தொடர்ந்தன.

நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதியைச் சந்திக்கும் முனையிலேயே இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவந்தது.

மேற்படி சத்தங்களைத் தொடர்ந்து அந்தப் பகுதி படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது

ஆங்காங்கே படையினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். வீதிகள் வெறிச்சோடின.

மேற்குறிப்பிட்ட இடத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த அமைதிப் படையினர் மீது இனந் தெரியாதவர்கள் துப்பாக்கிப் பிரயோகம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 5 ஜவான்கள் மரணம்

சென்னை, அக் 7

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற மோதலில் இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த ஐந்து ஜவான்கள் உயிரிழந்தனர்

இவர்களில் ஒருவர் அதிகாரி ஏனைய நால்வரும் ஜவான்கள் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ–எ)

## 45 புளொட் உறுப்பினர் அமைதிப்படை முகாமில்

### இயக்கப் பேச்சாளர் தகவல்

வவுனியா, அக் 7

இந்திய அமைதிப் படையினரால் 45 புளொட் உறுப்பினர்கள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக இவர்கள் தடுப்புக்காவலில் உள்ளார்கள்.

அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குப் பதிலாக புளொட் இயக்கத்தினரைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியிலேயே இந்தியப்படையினர் இன்னும் ஈடுபட்டுள்ளார்கள்.

இவ்வாறு புளொட் இயக்கப் பேச்சாளர் ஒருவர் வவுனியாவில் வைத்துத் தெரிவித்தார்.

இதேவேளையில் தமது உறுப்பினர்கள் இருவரைக் கைது செய்த இந்தியப் படையினர் அவர்களை மாற்று இயக்கத்தினரிடம் ஒப்படைத்ததன் பின் அவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரையும் தெரியவில்லை எனவும் அவர் கவலை தெரிவித்தார்

வவுனியா, செட்டிகுளம், முருங்கன் மன்னார், நெடுங்கேணி குஞ்சுக்குளம், பெரிய தம்பனை ஆகிய பகுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நவீன சுகாதார முறைப்படி பராமரிக்கப்பட்ட வளர்ச்சியடைந்த பன்றிகளும், குட்டிகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. மருந்துங்கள்:- S S. பண்ணை & மில். மூளாய் தெற்கு. (6955)

Honda Reconditioned புதிய பழைய Model C. 90, C 70, C 50, CD 90, MD 90, Lancer 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. No. 16. கண்டி வீதி. சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (A G A. அலுவலகம் முன்பாக) (6946)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள். தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடசழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C 357)

### கோழிக்குஞ்சு விநியோகம

ஒரு நாள் கோழிக் குஞ்சுகளான கோல்டன் கொமற், கைலைன், லேமன் கடும் சிவப்புப் பேடு, சேவல புறயிலர் சலுகை விலையிலும் ஓடர் செய்தும் 100க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கும் அதிக சலுகை உண்டு. சிவதாஸ். நாமகள் ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. (7076)

பிற்பா இன சிவப்பு, வெள்ளை ஒரு நாள் முட்டையிடும் கோழிக் குஞ்சுகள் புரொயிலர் குஞ்சுகள், சேவல குஞ்சும் 8-10-88 முதல் பெற்றுக்கொள்ளலாம். M G G. Forage Stores, 208, 1st Cross St, Jaffna. (7074)

பேட்டுக குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், புரொயிலர் குஞ்சுகள் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். பதிவு செய்ய: சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (7067)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பிறவுண் சேவற்குஞ்சுகள் பேட்டுக்குஞ்சுகள் Hyline வெள்ளைப்பேடு, கறுப்புச்சேவல்கள் 7 ஆந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்ய- சற்குணராஜா & பிரதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (7071)

### 6 ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சை

யாழ் மாவட்டத்தில் பிரபலம்பெற்ற தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் 6 ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சைக்குரிய கணிதம், தமிழ் பாடக்கைநூல் எம்மிடம் விற்பனைக்குண்டு ஆக்கியோன் ஆ. ந. இராசேந்திரன், Dip-in-Accy விலை 40.00 பூபாலசிங்கம் புத்தகசாலை, மத்திய பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (6957)

### தேவை

எமது நிலையப் பிள்ளைகளுக்கு படிப்பிக்க ஆசிரியர் தேவை. O/L.A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது. மானிப்பாய் ஆனைக்கோட்டை பகுதியிலுள்ளோர் விரும்பத்தக்கது. புதுவாழ்வு நிலையம் ஆனைக்கோட்டை. (7079)

### கல்வி

கடந்த கால வினாப் பத்திரங்களுடன் பத்து மணித்தியால மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்: 8-10-1988. சனி, ஞாயிறு நாட்களில் பகல் 11-30 மணி — 12 30 மணி வரை. S B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (6937)

### A/L இரசாயனம்

108, Brown Road A/L 89 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். 1ம் வருட வகுப்பு 8-10-88 சனி 4.00 p.m. (சனி, ஞாயிறு 4.00—6 00p.m) பௌதீக இரசாயனம் (4·5) (7080)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**விமலாம்பாள் உருத்திரலிங்கம்**
(Nee அரசரத்தினம் - அரஸ்கோ)

தோற்றம்: 14 - 05 - 1946 மறைவு: 07 - 10 - 1987

பிரியம் கண்டு சேர்ந்த சொந்தம்
புரிந்து கொண்ட இந்த உள்ளம்
தெரிந்து சொள்ள வழிவரு முன்னம்
பிரிவது தான் என்ன பந்தம்?

மாடப்புறு பிரிந்தால் அதன்
ஜோடிப்புறு உயிர் வாழ்வதில்லை
குஞ்சுப்புறு வாழவேண்டும்-அதனால்
ஆண்புறு உயிர் தாங்கி - வாழ்கிறது.

கணவன், பிள்ளைகள்

'விமலம்'
நல்லூர் சுறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம். (7146)

## ★ பிறந்த நாள் வாழ்த்து ★

### ஆ. பானுரமா

வட்டுக்கோட்டை சிவன் தேவஸ்தான அர்ச்சகராகிய ஆனந்தரத்தினசர்மா சாம்பவி தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி ஆ. பானுரமா தனது முதலாவது பிறந்த நாளை அக்கா அனுவுடன் இன்று (7-10-88) வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை அம்மா, அப்பா, அக்கா அனுரமா, மற்றும் உற்றார் உறவினர் யாவரும் தல்லையப்பற்று முருகன் அருள்பெற்று நீடூழி வாழ்க என்று வாழ்த்துகிறார்கள். (6956)

+
J. M. J.

## உங்கள் பயண அமைப்பாளர்

## எஸ்.பி.அன்ரன் வழங்கும் வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜெர்மனி ★ இத்தாலி
★ சுவிஸ் ★ பிரான்ஸ்

ஷெ நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். ஒவ்வொரு வாரமும் எமது குழுக்கள் இறைவன் நல்லருளுடன் ஷெ நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றன.

கனடாவுக்குப் பெண்கள் குடும்பமாகச் செல்ல இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

நீங்கள் விரும்பும் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

### 1. கிரேக்க கப்பல் வேலை வாய்ப்புகள்

பிரபல கிரேக்க கப்பல் கம்பனியைச் சேர்ந்த பெரிய கப்பல்களில் பணிபுரியப் பின்வருவோர் உடனடியாகத் தேவை.

1. Captain
2. Chief Officer
3. Chief Engineer
4. 2nd Engineer
5. Oilers
6. Radio Officers
7. A-B

அனுபவமும் தேர்ச்சியும் உடையவர்களுக்கு உடனடி வாய்ப்பு வழங்கப்படும்

### 2. குவைத் நாட்டில்

ஆஸ்பத்திரி, பாடசாலை மற்றும் பொது அலுவலகங்களில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக CLEANERS ஆகப் பணியாற்றுவதற்கு விரும்புகிறீர்களா?

சம்பளம்: 35 குவைத் டினார்கள்

### 3. கனடா, லண்டன், பிரான்ஸ், கிறீஸ், ஓமான், அபுதாபி, சிங்கப்பூர், குவைத, ஜோர்தான், லெபனான், சைப்ரஸ்

**வீட்டு வேலைப் பணிப்பெண்கள்**

### 4. சவூதி அரேபியா

சவூதி அரேபியாவில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் CLEANERS உடனடியாகத் தேவை

சம்பளம்: 450 SR
ஓவர்டைம், உணவு, இருப்பிடம் இலவசம்,

மற்றும் சகல விபரங்களுக்கும் உடனே தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறேன்.

உங்கள் பயண அமைப்பாளர்:
# S. P. ANTON
No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம். (C 380)

## சமுதாயத்தின் மாற்றத்துக்குரிய தொழில் முன்னிலை அறிவை மாணவர்கள் பெற்றிருக்கவேண்டும்

மானிப்பாய், அக் 7

வாழ்க்கைத் திறன் கல்வி வாழ்க்கைக்கு தேவையான தொழிற் பாட்டுத் திறனை வளர்க்கக்கூடியதாக அமைய வேண்டும். பாடசாலையை விட்டு விலகும் ஒவ்வொரு மாணவனும் சமுதாயத்தின் மாற்றத்துக்குரிய தொழில் முன்னிலை அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.

வாழ்க்கைத் திறன் தொழில் நுட்ப ஆசிரியர்களுக்கான முதலாம் கட்டக் கருத்தரங்கில் சிறப்புரையாற்றும் பொழுது யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கருத்தரங்கு உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

திரு. சபாநாயகம் தனது உரையில்;-

''மனையியல், விவசாயம் போன்ற தொழில் நுட்ப பாடங்களில் மாணவர்கள் செய்முறை அறிவைப் பெறுவதற்குத் தேவையான உபகரணங்களை பாடசாலைகளுக்குப் பெற்றுத்தர தேவையான நடவடிக்கைகளை நான் மேற்கொள்ள உள்ளேன்'' என்றார்.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ். தனஞ்செயன், தொழில் நுட்பக்கல்வி அதிகாரி திரு எஸ். சுப்பிரமணியம் மனையியல். வட்டாரக் கல்வி அதிகாரி திருமதி எஸ். சண்முகரத்தினம் ஆகியோர் உரையாற்றினர். (இ-ச-90)

### மண்டைதீவில் சர்வதேச சிறுவர் வாரம்

மண்டைதீவு, அக் 7

சர்வதேச சிறுவர் வாரத்தையொட்டி மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

சிறுவர்களின் உடல் நலம்தொடர்பான கருத்தரங்கு, சிறுவர் புத்தகக் கண்காட்சி, சிறுவர்களது கலைநிகழ்ச்சிகள் ஆகியன இங்கு நிகழவுள்ளன.

இதற்கானஒழுங்குகளை பிரஸ்தாப வித்தியாலய அதிபர் திரு த. துரைசிங்கம் மேற்கொண்டு வருகிறார். (ச)

### ப. நோ. கூ. சங்க இருபாலைக் குழு

யாழ்ப்பாணம். அக் 7

வலிகாமம் கிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்க இருபாலைக் கிளைக்குழுத்தேர்தலில் திரு செல்லையா சபாரத்தினம் தலைமையில் போட்டியிட்ட ஒன்பது வேட்பாளர்களும் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டினர்.

வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

திரு. செல்லையா சபாரத்தினம்.
திரு கந்தையா குமாரசாமி
திரு. அப்மையா விக்கினேஸ்வரன்.
திரு சுப்பையா இராசேந்திரம்.
திரு. செல்லப்பா செல்லத்துரை.
திரு. செல்லையா தர்மராஜா.
திரு. கிருஷ்ணபிள்ளை தங்கவடிவேல்.
திருமதி. புஷ்பமலர் இராஜேஸ்வரன்.
திரு. பரம்பலம் செல்லையா. (ச)

### பெறுபேறுகளைப் பெறமுடியாமல் அவதி

பருத்தித்துறை, அக் 7

யாழ் பல் தொழில் நுட்பக் கல்லூரியின் புதிய கல்வியாண்டு (1988 / 1989) ஆரம்பிக்கப்படும்வரை பழைய மாணவர்கள் எவரும் கல்லூரிக்குச் செல்வதற்குக் தடை விதிக்கப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் திரு. சி. இராசேந்திரா அறிவித்துள்ளார்.

இதனால் பரீட்சை பெறுபேற்றுப் பத்திரத்தையோ, வேறு ஆவணங்களையோ பெறமுடியாமல் பழைய மாணவர்கள் பலர் திரும்பிச் செல்கின்றனர்

இவற்றைப் பெற முடியாத பழைய மாணவர்கள் பலர் நேர்முகப் பரீட்சைகளில் இவ் ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாது கஷ்டமடைகின்றனர். (ச-118)

## தேவை

யாழ். நகரில் இயங்கும் றெடிமேட் ஆடை தயாரிக்கும் நிலையத்திற்கு தையல் வேலையில் நன்கு தேர்ச்சி பெற்ற பெண் பிள்ளைகளும், அனுபவமுள்ள (ஆண்) விற்பனைப் பிரதிநிதி ஒருவரும் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

திரு. தம்பி,
341, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(6948)

## எமது நேற்றைய ஒறிஜினல் வெளியீடு

கமல் ✶ நிரோஷா ✶ ஜனகராஜ்

# 'சூரசம்ஹாரம்'

(Pyramid Orgnal with cover)

முன்கூட்டியே Recording ஓடர்களைப் பதிவு செய்து கொள்பவர்களுக்கு மட்டும் கொழும்பில் படம் வெளியிடும் அன்று இங்கும் பிரதிகளை வழங்குகின்றோம்.

★ **குணம்** வீடியோ சென்ரர் ★

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C 391)

## வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெற நாட வேண்டிய இடம்

# FORTUNA ENTERPRISES
(Labour License No. 79)

பாரின், குவைத், சவூதி,
யூ. ஏ. ஈ, சிங்கப்பூர்
வேலை வாய்ப்புகள்

| | | |
|---|---|---|
| (1) | லேபரேர்ஸ் (சம்பளம்ரூ.4500) | — 50 |
| (2) | டிறைவோஸ் | — 05 |
| (3) | ஹெவி வெயிக்கிள் டிறைவேர்ஸ் (H V Drivers) | — 07 |
| (4) | வீட்டுப் பணிப்பெண்கள் | |
| (5) | மேசன் | |
| (6) | காப்பென்டேர்ஸ் | |
| (7) | எலெக்ரிஸன் | |
| (8) | மெக்கானிக் (Diesel & Petrol) | |
| (9) | தோட்ட வேலையாட்கள் (Gardeners) | |
| (10) | பெண் தையற்காரர் (Female Tailors) | |

நீங்கள் நாடவேண்டிய முகவரி:

**போடியூனா என்ரபிரைசஸ்**

யாழ்ப்பாணப் பிரதிநிதி:
இ. விஸ்வேஸ்வரயன்
3ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(C-378)

## முதலாம் ஆண்டு நினைவு



பிறப்பு: 04 01 1938

இறப்பு: 08 10 1987

**மனுவற்பிள்ளை அந்தோனிமுத்து**
[முன்னாள் அரசாங்க அதிபர்- மட்டக்களப்பு]

அன்னாரின் ஞாபகார்த்த வழிபாடு 8-10-1988 காலை 9-00 மணியளவில் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி சிற்றாலயத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்

திருமதி றதினி அந்தோனிமுத்து,
பிள்ளைகள்: தாறினி, தீலினி

No:- 124, பழைய பூங்கா வீதி.
யாழ்ப்பாணம். (6922)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு, கல்முனை கல்வி மாவட்டங்களில்

# வெளிநாட்டு உதவிகளுடன் விஞ்ஞானக் கல்வி அபிவிருத்தி

அம்பாறை, அக் 7

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மட்டக்களப்பு, கல்முனை கல்வி மாவட்டங்களில் உயர்தர விஞ்ஞானக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு, இங்கிலாந்திலுள்ள வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனம் உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

முதற்கட்டமாக மட்டக்களப்பு கல்வி மாவட்டத்தில் மேற்படி நிறுவனத்தின் அனுசரணையுடன் உயர்தர விஞ்ஞானக்கல்வி அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றது.

இதற்கென, கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தின், சசெக்ஸ் (இங்கிலாந்து) பல்கலைக்கழக இணைப்பாளர் கலாநிதி திரு. டி. ஆர். எம். ஜெடி பற்றிக் வேலணை வால்டன் தலைமையிலான குழுவினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆய்வுகளை நடத்தியுள்ளதுடன், உயர்தர விஞ்ஞானக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான அறிக்கைகளையும் தயாரித்துள்ளனர்.

இந்த அறிக்கைக்கு அமைவாக மேற்படி இங்கிலாந்திலுள்ள வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உயர்தர விஞ்ஞானக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு உதவிகளை வழங்கும். (ச-14)

## ஆங்கில ஆசிரியர்களும் விஞ்ஞான ஆசிரியரும் நியமனம்

யாழ்ப்பாணம் அக்-7

யாழ் மாவட்டத்துக்கு புதிதாக 2 ஆங்கில ஆசிரியர்களும் ஒரு விஞ்ஞான ஆசிரியரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இரு ஆங்கில ஆசிரியர்களும் கல்விக் கல்லூரியில் பயிற்சி பெற்றவர்கள்

இவர்களில் திரு. ஜே. ஜெடி பற்றிக் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்திற்கும் செல்வி. கே. சந்திரவதனி வரணி மகாவித்தியாலயத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தராதரப்பத்திரமற்ற விஞ்ஞான ஆசிரியர் ஜானகிநடராஜா கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் மூவரும் 3 ஆண்டுகள் யாழ். மாவட்ட கஷ்டப்பிரதேசத்தில் சேவையாற்றுவர். (இ-க)





முல்லைத்தீவுப் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகளிடம் பிடிபட்ட இரண்டு இந்தியப்படையின் ஜவான்கள் அண்மையில் விடுதலைப் புலிகளினால் புதுக்குடியிருப்பு பிரஜைகள் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டனர் அல்லவா? இரு ஜவான்களையும் விடுவிப்பதற்காக விடுதலைப் புலிகள் அழைத்து வந்தபோது எடுக்கப்பட்ட படத்தையும், ஜவான்களிடம் அவர்களின் ஆயுதத்தைப் போராளிகள் ஒப்படைத்த பின்னர் போராளி ஒருவருடன் ஜவான்கள் கைகொடுத்து மகிழ்ந்தபோது எடுக்கப்பட்ட படத்தையும் இங்கு காணலாம்.

# ஆற்றல் மிக்க அதிபர்களை சமுதாயம் மறப்பதில்லை

## சேவை நலம் பாராட்டு விழாவில் பிரதம கல்வி அதிகாரி பேச்சு

புங்குடுதீவு அக் 7

ஆற்றல் மிக்க அதிபர்களைச் சமுதாயம் என்றுமே மறப்பதில்லை. அவர்களை மதித்துப் போற்றும் என்பது திண்ணம். இந்த வகையில் அதிபர் திரு த. துரைசிங்கம் தமது திறமையினால் மக்கள் மனதில் இடம் பெற்றுள்ளார்.

யாழ் பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் இப்படிக் கூறினார்.

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றி மண்டைதீவு கொத்தணி அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. த. துரைசிங்கத்துக்குப் பிரஸ்தாப வித்தியாலய ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள் வழங்கிய சேவை நலம் பாராட்டு விழாவில் அவர் உரையாற்றினார்.

அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது: ஆசிரியர்கள் தொடர்ந்து கற்க வேண்டும். கல்விக்கு எல்லையில்லை. கற்க மறுப்பவன் வாழ மறுக்கின்றான் என சுவாமி இராமகிருஷ்ணரின் வாக்கை ஆசிரியர்கள் மறந்துவிடக்கூடாது என்று கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. க. த. தருமலிங்கம் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் அதிபர் திரு. துரைசிங்கம் கணேச மகா வித்தியாலய வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகளை மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள் என்றார்.

ஆசிரியமணி சி. கநாகலிங்கம் கவிதை மூலம் தமது பாராட்டை வழங்கினார்.

முன்னாள் அதிபர் திரு. நா. கார்த்திகேசு, கல்வியதிகாரி திரு. சி. புலேந்திரன், புங்குடுதீவு கொத்தணி அதிபர் திரு. ஏ. சி. நல்லையா, கல்வியதிகாரி திரு. க. மகேசன், திரு. செ. தில்லைநாதன், திரு. வி ஆர் கே. இரத்தினசபாபதி, ஆசிரியர் திரு. ச. சதாசிவம், செல்வி தி. வசந்தகுமாரி ஆசிரியை திருமதி ச. சங்கரராசா ஆகியோர் உட்பட பலர் பாராட்டுரை வழங்கினர். (-ச)

## பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், அக் 7

"பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாவிக்க முடியாத நிலையில் இருந்த மைதானத்தை திருத்தி அமைத்து அதில் விளையாட்டுப் போட்டி ஒன்றையும் ஒழுங்கு முறையாக நடத்தியது பாராட்டத் தக்கது"

இராமநாதன் கல்லூரியின் வருடாந்த இல்லப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. சரவணமுத்து தனஞ்செயன் மேற்கண்டவாறு கூறினார்.

இல்ல விளையாட்டுப் போட்டி கல்லூரி அதிபர் திருமதி எஸ். எஸ். குமாரசாமியின் தலைமையில் நடைபெற்றது.

திரு தனஞ்செயன் தனது உரையில் மேலும் கூறியதாவது: மாணவர்களின் உடற் பயிற்சி நிகழ்ச்சி மிகவும் பாராட்டக் கூடிய வகையில் அமைந்திருந்தது.

இக் கல்லூரியின் உயர்ச்சிக்குப் பெற்றோர், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் அதிபருக்கு அளிக்கும் ஒத்துழைப்பு பாராட்டத்தக்கது"

-இப்படி அவர் கூறினார். (ச)

## வெளிநாடு செல்லும் இரு கல்விப்பணிப்பாளர்

யாழ்ப்பாணம், அக். 7

முதியோர் கல்வி, தொழிற்கல்வி ஆகியன சம்பந்தமான கருத்தரங்கு எதிர்வரும் 31 ஆம் திகதி மேற்கு ஜேர்மனியில் ஆரம்பமாகிறது.

இரண்டு வாரங்கள் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ள இலங்கையில் இருந்தும் இருவர் செல்கின்றனர்.

யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு வெற்றிவேலு சபாநாயகம், பண்டாரவளை கல்விப்பணிப்பாளர் திரு. மொ. க. ம ஆகியோர இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகிறது. (இ-க)

## பல ஆசிரியர்கள் தோற்றத் தவறினர்

அச்சுவேலி, அக. 7


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டித் தெரிவுப் பரீட்சைக்கு விண்ணப்பித்த 3:4 ஆசிரியாகளில 266 பேர் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றினர்.

எண்பதெட்டு ஆசிரியர்கள் பரீட்சைக்குத் தோற்றவில்லை.

தோற்றத் தவறியவர்களில் பலர் தாம் வந்த பஸ் இடைவழியில் தடுத்து நிறுத்தப்பட்டதால் தோற்ற முடியவில்லை என்று தெரிவித்தனர். (ச-111)


உஷா

பெருமிதமாக அறிமுகம் செய்யும் பலவிதமான சீலிங் மின்விசிறிகள்



உஷா ஸ்டாண்டர்ட்

விலை: ரூபா 1500 முதல் 1575/-வரை

- 36'', 42'', 48'', 56'' அளவுகளில்
- ஒரு அடி நீளமான கீழ்த்தண்டு, இணைப்பு வசதிகள் இரப்பர் புஷினி 2 கவசங்கள், 5 வேக ரெகுலேட்டர் என்பவற்றுடன் பூர்த்தியானது.
- மேலதிகமாக ரூ 75/- செலுத்தி மின்குமிழ் ஒன்றை இணைத்துக் கொள்ளலாம்.

உஷா அலங்கார விசிறிகள்


பொன் வண்ணத்திலும் அலங்கார இணைப்புகளுடனும்

விலை ரூ 1750/- முதல் 1975/- வரை

- தேவைக்கேற்ப கபில நிறத்திலும் வெள்ளை நிறத்திலும்
- கோள்வடிவ மின்குமிழ்

தொலைபேசி: 71-6922, 71-793

DUROL®




டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.

'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லி. Pfizer சில்லறை விலை ரூ. 39/90 200 மி. லி.

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.



THANKS

The Members of the family of late **Mr. Mathews Jacob** wisn to thank all those who sent in messages of condolence floral wreaths visited home to pay their last respects and participated in the last rites and burial. They regret their inability to thank them individually.

**Dr. J. P. C. Phillips**

No 12, Cathedral Street,
Jaffna. [C-375]



ரேணியோ

தமிழ் ஆங்கிலம்

தட்டச்சு மற்றும் போஸ்ரர் அச்சுவேலைகள் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்

★ தயா அச்சகம் ★

இல. 13... மனோகரா சந்தி, யாழ்ப்பாணம். (C/372)


# கேள்வி அறிவித்தல்

## பிரதேசக் கல்வித் திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்

### ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப் புனருத்தாரணத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் கட்டிட வேலைகள்

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேசக் கல்வித்திணைக்கள கேள்விச் சபைத் தலைவரால் 1988 ஒக்ரோபர் மாதம் 21 ஆம் திகதி (21-10-88) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலை செய்வதற்கென கல்வித்திணைக்களம், கட்டிடத் திணைக்களம் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய ஏதாவது ஒரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களுக்கு 1988 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி (18-10-88) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரம் பணமாக [ரூபா 50/-] ரூபா ஐம்பதும், மீளளிக்கப்படும் கேள்விப் பணமாக (ரூபா 250/-) ரூபா இருநூற்றி ஐம்பதும் செலுத்தியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் யாழ் பிரதேச கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணமும், கேள்விப்பத்திரப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகவோ அல்லது காசுக்கட்டளையாகவோ செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1988 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி (21-10-88) காலை 10-30 மணிக்கு யாழ் கல்வித்திணைக்களத்தில் திணைக்கள கேள்விச்சபையால் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர்கள் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ் பிரதேசக் கல்வித்திணைக்களத்தின் கட்டிட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வெ. சபாநாயகம்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1988-10-05.

| | பாடசாலையின் பெயர் | வேலையின் விபரணம் | பதிவுசெய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1 | யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம். | மூன்று மாடிக் கட்டிடம் 68' 9'' × 25' 0'' | ரூ. 6,00,000/- |
| 2. | யா/யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம். | பெருந்திருத்த வேலை | ரூ. 4,50,000/- |
| 3. | யா/கொட்டடி நமசிவாய வித்தி, யாழ்ப்பாணம். | மூன்று மாடிக் கட்டிடம் 90' 0'' × 25' 0'' | ரூ. 11,00,000/- |
| 4. | யா/கொட்டடி நமசிவாய வித்தி, யாழ்ப்பாணம். | 100' × 20' கட்டிடத்தின் மிகுதி வேலை | ரூ 2,50,000/- |
| 5. | யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். | மூன்று மாடிக் கட்டிடம் 90' × 25' | ரூ. 11,00,000/- |
| 6. | யா/நெல்லியடி மத்திய ம. வி, கரவெட்டி. | மூன்று மாடிக் கட்டிடம் 90' × 25' | ரூ 12,00,000/- |
| 7. | யா/நெல்லியடி மத்திய ம. வி, கரவெட்டி. | சுற்றுமதில் | ரூ 2,00,000/- |
| 8. | யா/உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தி, உடுப்பிட்டி. | பாடசாலைக் கட்டிடம் 100' × 20' | ரூ 3,00,000/- |
| 9. | யா/வல்வெட்டித்துறை அ. மி. த. க. பாடசாலை. | மிகுதிக் கட்டிட வேலை 100' × 20' | ரூ. 2,50,000/- |
| 10. | யா/கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை, கோப்பாய். | பெருந்திருத்த வேலை | ரூ 2,00,000/- |

(C/401)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பனையின் பொருள்கள் வாங்கத் தடை!**

மட்டக்களப்பில் இந்திய அமைதிப் படையினர் சேர்த்த நிலையங்களில் பொருள்களைக் கொள் வனவு செய்வதற்கு பாதுகாப்புச் சபை... டும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவு மேலிடத்திலால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ ஒ 21)

## Universi y of Jaffna

### CERTIFICATE COURSE IN DATA PROCESSING AND BASIC LANGUA E PROGRAMMING

The above course will be conducted in the English medium during weekends commencing from December 1988 Applications for admissions will be received by the University till 31st October 1988. The applicants should have the following minimum qualifications.

(a) Pass in at least two subjects at the G. C. E. (A/L) Examination. One of the subjects should be Pure Mathematics. Applied Mathematics, Physics, Chemistry, Botany, Zoology, Accounts, Commerce, Economics, Geography or Logic

and

(b) Pass in English at the G.C E (O/L). Examination or any other equivalent qualification.


Applications from students following courses in the Universities will not be considered.

Requests for forms and other particulars must be sent under registered cover to the Head, Computer Unit, University of Jaffna together with a Money order / Postal order for Rs. 20/- drawn in favour of the Bursar. University of Jaffna.

**Registrar,**
**University of Jaffna.**

Thirunelvely,
Jaffna.
4th October 1988. (C/369

## முதலாண்டு நினைவஞ்சலி



**அமரர் திரு. சபாபதி ஈஸ்வரதாஸ்**
(இளைப்பாறிய அரச லிகிதர்,
உதயன் - சஞ்சீவி ஊழியர்)

பிறப்பு: 1929 09 22 இறப்பு: 1987-09-19

திதி: 1988-10 07

நிமிர்ந்த நடையும்
நேர் கொண்ட பார்வையும்
அமைந்த உங்கள் தலைமை
அரிச் சுவட்டில் நம் தொடர
தலைவர்க்குள் தலைவனாய்
தந்தைக்குள் தந்தையுமாய்
நல்லோர்க்குள் நல்லோனாய்
நாமுவக்க — நாம் வாழும்
வையமுவக்க வாழ்ந்தீரே!
விளையாட்டு வீரனாய்
மேம்பட்டீர் ஆண்மைகளில்
யாருமைப் போற்றுதார்?
யாருமை நயவாதார்?
இன்று எங்கு ஒய்ந்தீர்
இல்லைச் சுமைனறு?
அரச செயலகத்து
அயராத ஊழியனாய்
அதன் பின் இளைப்பாறி
அரிய தமிழ் ஏடொன்றின்
அலுவலக ஊழியனாய்
உழைக்கும் உரம் பெற்றும்
உத்தமரே உம்முயிரை
வளைத்துப் பிடித்தே
வானுலகம் வாங்கியதால்
ஏங்கி அழுகின்றோம்
இன் மனைவி, இரு மக்கள்
அழுகின்றோம் அழுதுங்கள்
அடிகள் தொழுகின்றோம்!

ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.

— மனைவி, மக்கள்.

"செல்வஸ்தான்"
ஆறுமுகம் வீதி,
கன்னாகம். (C/356)

# தலைமன்னார்ப் பகுதியில் கொள்ளைகள் அதிகரிப்பு

## மீனவர்கள் பெருமளவு பாதிப்பு

தலைமன்னார், அக். 7 மன்னார்ப் பகுதியில் அடிக்கடி வீடுகளிலும். கடற் பிராந்தியத்திலும் கொள்ளைகள் இடம்பெறுகின்றன.

இதனால் இப்பகுதி மீனவர்களும், குடியானவர்களும் அச்சமும் கவலையும் கொண்டுள்ளனர்.

ஆயுத முனைகளில் வீடுகளில் நகைகள், பணம் சூறையாடப்படுவதுடன் கடற் கரையிலும், கடலிலும் மீன்பிடிப்படகுகள், இயந்திரங்கள் பறிக்கப்பட்டு கடத்தப்படுகின்றன.

இச்சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதனால் மீனவர்கள் இரவு மீன்பிடித் தொழிலுக்கு செல்ல தயங்குவதுடன் மீன்பிடி வாடிகளில் தங்கள் மீன்பிடி இயந்திரங்களை பாதுகாப்பாக வைக்கவும் பயப்படுகின்றனர். (இ)

## உடலுறுதி, கல்வி அறிவுடைய சமுதாயமாக நாம் விளங்கவேண்டும்

### கல்விப் பணிப்பாளர் உரை

நெடுந்தீவு, அக். 7 உடலுறுதியும் சிறந்த கல்வியும் உடைய சமுதாயமாக நாம் விளங்க வேண்டியது இன்று மிகவும் அவசியமானதாகும். மாணவ சமுதாயம் இதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்.புனித பொஸ்கோ ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் கூறினார்.

வித்தியாலய அதிபர் அருட்செல்வி ஜெரோம் தனது தலைமை உரையில், சிறுர்கள் தமக்குள் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிப்படுத்த இது போன்ற போட்டிகள் உதவுவதாகக் கூறினர்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ் சிவானந்தன் உட்பட யாழ் கல்வித் திணைக்கள அதிகாரிகள் பலர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினர் வழங்கினர். போட்டியில் முதலாம் இடத்தை ஹேஸ் இல்லமும் இரண்டாவது மூன்றாவது இடங்களை முறையே பச்சை, சிவப்பு இல்லங்களும் பெற்றுக் கொண்டன. (ஓ-ச-111)

### பாலர் பாடசாலை

அச்சுவேலி அக் 7 கடந்த வருடம் அக்டோபர் மாதம் யாழ் பெரியாஸ்பத்திரியில் வைத்து கொலைசெய்யப்பட்ட சிவபாதம் (பாலன்) நினைவாக கன்னாகம் தெற்கில் பாலர் பாடசாலை ஒன்று அமைக்கப்படுகின்றது. (II-ச)

### பணம் நகைகள் திருட்டு

கரவெட்டி அக் 7 கரவெட்டி கிழக்கில் உள்ள வீடு ஒன்றில் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பணம், நகைகள் களவாடப்பட்டுள்ளன.

கரவெட்டி கிழக்கில் அத்துளு அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் வதியும் திருகோணமலையைச் சேர்ந்த ஒருவர் வீட்டிலேயே இக்களவு இடம் பெற்றது.

### மக்கள் முகம்

**முகாமைத்துவ நிபுணராக சித்தி**



யாழ்ப்பாணம் அக்-7 திரு நல்லையா குமரகுருபரன் லண்டன்-முகாமைத்துவ நிபுணர்கள் நிறுவகத்தின் முகாமைத்துவ நிபுணர்'' ஆனார்.

முகாமைத்துவ நிபுணர்கள் நிறுவகத்தின் டிப்புளோமாவைப் பெற்றுக் கொண்ட இவருக்கு இவருடைய ஏனைய பல பட்டங்களைக் கருத்தில் கொண்டு சாதாரண உறுப்புரிமையிலும் உயர்வான சிரேஷ்ட உறுப்புரிமை வழங்கப்பட்டது.

திரு குமரகுருபரன் கனேடிய அரசின் பட்டயம் பெற்ற தொழில் துறை வர்த்தக மற்றும் நிறுவனங்கள் கணக்கறிஞர்கள் நிறுவகத்தின் உறுப்பினரும் கூட.

இவர் யாழ் இந்துக் கல்லூரியின் பழையமாணவன்.

திரு. குமரகுருபரன் கணக்காளராகப் பணி புரிகின்றார். இவர் பட்டயக் கணக்காளர் திரு நல்லையாவினதும் திருமதி சு நல்லையாவினதும் சிரேஷ்ட புதல்வன்.

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Further to my advertisement calling applications for the post of Professor of Statistics up to 7th October 1988.

Closing date for the applications for the post of Professor of Statistics has been extended till 7th December 1988.

Application forms and the relevant particulars for the above post may be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments Request for application forms by post should be accompanied by a self addressed stamped enveloped of 23×10 cm.

N B : Those who have applied earlier need not apply as those applications will be taken into consideration.

**REGISTRAR**

University of Jaffna, Sri Lanka,
Thirunelvely,
Jaffna.
1st October 1988. (C/367)

### லியோ கழகம் முன் மாதிரி

யாழ்ப்பாணம், அக் 7 பூக்கன்றுகளைப் பதியம் வைத்து அவற்றை மண் பொதிகளில் வளர்த்து விற்பனை செய்து அதன் மூலம் பெறப்படும் பணத்தை வடமாகாண புற்று நோய்ச் சங்கத்துக்கு வழங்க யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் லியோ கழகம் முன் வந்துள்ளது. (இ 9)

கிளிநொச்சிக்கு

## ஒருங்கிணைக்கப்பட்ட உதவித்திட்ட படிவங்கள்

கிளிநொச்சி, அக். 7 கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட உதவித் திட்டம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்டக் கச்சேரிக்கு ஐயாயிரம் படிவங்கள் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்துள்ளன. இவற்றில் மூவாயிரம் படிவங்கள் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விநியோகிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடந்த 21 ஆம் திகதி கிளிநொச்சிக் கச்சேரியில் இடம் பெற்றது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. சே. தேவசிகாமணி, மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம். தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு கே. துரைராசா அகியோர் உட்பட கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராம சேவகர்கள் அனைவரும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ஐ-76)

கடந்த கால அசம்பாவிதத்தின் போது

## தலைவனை இழந்த குடும்பங்களுக்கு உதவ

### ம. மு. நடுநிலையம் ஏற்பாடு

கடந்தகால அசம்பாவிதங்களின்போது குடும்பத் தலைவனை இழந்துள்ள குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சியில் ஈடுபட யாழ்- மறை மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் இரண்டாயிரம் ரூபாவை வழங்க முன் வந்துள்ளது.

இரண்டாயிரம் ரூபாவையும் பணமாக அல்லாமல் தொழில்களுக்கு உரிய உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதில் நடுநிலையம் ஈடுபட்டுள்ளது.

இதுவரை மாதாமாதம் இருநூறு ரூபாவை நடுநிலையத்தில் இருந்து உதவியாகப் பெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாயிரத்து இருநூறு குடும்பங்களையும் அவ்வப்பகுதி பங்குத் தந்தைமார் உண்மையில அவர்கள் குடும்பத் தலைவனை இழந்து வருவாயின்றித் தவிப்பவர்கள்தானா என்பதை நடுநிலையத்திற்கு அறிந்து சமர்ப்பிக்கும்படி நிலைய இயக்குநர் வண- பிதா, எம். ஈ. பயஸ் அடிகளார் கடிதமூலம் கேட்டுள்ளார்.

குடும்பங்களுக்கு வழங்கப்படும் இரண்டாயிரம் ரூபா உபகரணங்களைப் பாவித்து ஜீவனோபாயத்திற்கான வருவாயை ஏனைய உறுப்பினர்கள் சம்பாதித்துக் கொள்ள ஆரம்பப் பயிற்சியையும் நடுநிலையம் வழங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ- 51)

## வயாவிளான்-குரும்பசிட்டி வீதி திருத்த வேலை ஆரம்பம்

பலாலி, அக், 7 மிகமோசமான முறையில் சீர் கெட்டிருந்த வயாவிளான் — குரும்பசிட்டி வீதியைத் திருத்தும் வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

கடந்தகால ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கையினால் குரும்பசிட்டியிலும் வயாவிளானிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருந்ததனால் வீதிகள் அழிக்கப்பட்டும்— அழிவடைப்பட்டும் இருந்தன.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்பின் ஸ்ரீலங்கா இராணுவம் இப்பகுதிகளைவிட்டு வெளியேறிய போதும் இதுவரை இவ்வீதிகள் புனரமைக்கப்படாமலேயே இருந்தன.

குரும்பசிட்டிப் பிரசைகள் குழுவினதும் ஏனைய பொதுத்தாபனங்களினதும் தொடர்ச்சியான வேண்டுகோளின் படியும், முயற்சியினாலும் இவ் வீதித் திருத்தங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வீதியைத் திருத்தி அமைகக நடவடிக்கையை மேற்கொண்டதற்காக வீதிஅபிவிருத்தி அதிகாரசபைக்கு வலிகிழக்கு (அச்சுவேலி) தனியார் போக்குவரத்துச் சங்கமும் குரும்பசிட்டிப் பிரசைகள் குழுவும் தமது நன்றியைத் தெரிவித்துள்ளன. (ஒ-191)

## மாணவர்களுக்கு விளக்கமளிக்க இலத்திரனியல் தொகுதி

மானிப்பாய் அக் 7 இலத்திரனியல் பாடத்தை போதிப்பதற்கும் சோதனைகளின் போது மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கவும் இலத்திரனியல் தொகுதி ஒன்றை அமைப்பதில் விஞ்ஞான பாட ஆலோசகர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஆண்டு 11 இல் விஞ்ஞான பாடத்தில் இலத்திரனியல் பாடம் சேர்க்கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் விளக்கம் அளிக்கவும் இலத்திரனியல் தொகுதி தேவைப்படுவதாக விஞ்ஞான பாட ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டதற்கமைய தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினர் விஞ்ஞான பாட ஆலோசகர்களின் உதவியுடன் இதனை வெளியிட முன்வந்துள்ளனர். (ச-90)

### பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழா நவம்பர் மாதம் 26 ஆம் திகதி நடைபெறும். (இ-90)

## சோவியத் கலை கலாசார கண்காட்சி

கொடிகாமம் அக் 7 சோவியத் நாட்டின் கலை, கலாசாரம், விஞ்ஞானம் பற்றிய தமிழ் ஆங்கில நூல்களும் சிறுவருக்கான நூல்களும் சஞ்சிகைகளும் அடங்கிய கண்காட்சி ஒன்று சாவகச்சேரியில் இம் மாத இறுதியில் நடைபெற ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை—சோவியத் நட்புறவுச் சங்கம் கவனித்துவருகிறது. (ச 75)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**தணிகாசலம்பிள்ளை முத்தம்மா**

தோற்றம்:- 18- 5- 1942 மறைவு:- 21 -9- 1987


திதி:- 9- 10- 1988

எத்தனையாண்டு கழிந்தாலும் உங்கள் பிரிவு நினைவலைகள் பேராறுய்ப் பெருக்கெடுத்து வற்றாத நீராக அலைமோதி நிறை நெஞ்சம் குளிர்விக்கும் நின்னுருவம நிழல் நெஞ்சம் என்றும் நீங்காதே!

உங்கள் பிரிவை ஆற்றுது தவிக்கும்:
அன்புக்கணவர், அருமைச் செல்வங்கள், உறவினர்கள்.

அராலி வடக்கு. (7130)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**புற்றிடம் கொண்டார் ஆறுமுகம் - கேதாரநாதன்**
(சுங்க அதிகாரி)

தோற்றம்: 9- 9- 1940 மறைவு: 9- 9- 1988

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 8- 10- 1988 சனிக்கிழமை காலை 7.00 மணிமுதல் வேலணை சாட்டி மடத்திலும், 9- 10- 1988 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும் இக்கிரியைகளில் கலந்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்

வேலணை கிழக்கு,
வேலணை- 5 (7143)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து

**பொருள்:**

பரந்து நிற்கும் புகழை விரும்பி, உயிர் வாழ்வையும் விரும்பாத வீரர், வீரக்கழலைக் காலில் கட்டிக் கொள்ளுதல் அழகு செய்யும் தன்மையுடையதாகும்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல- 292/2 நாவலர் வீதி தொலைபேசி 24805, 22073
யாழ்ப்பாணம்
07-10 1988


## தொழிற் தடைகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில், உழவு இயந்திரங்களை அமைதிப்படையினரின் அனுமதியுடன் மட்டுமே பாவிக்கலாம் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.

அந்த மாவட்டத்தில் இதுவரை, உழவு இயந்திரங்களைப் பாவிக்க விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டே, புதிய நிபந்தனை கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அதுவும் மாவட்டத்தின் உயர் சிவில் அதிகாரிகள், உழவு இயந்திரப் பாவனைத் தடையால், விவசாயத்துக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை எடுத்துக் கூறிய பின்னரே தடை நீக்கப்பட்டு, கட்டுப்பாடு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டும் பணியை மேற்கொள்வதற்கு என்றே இந்திய அமைதிப்படை இங்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அமைதியை நிலைநாட்டுவதற்காக மக்கள் தொழிலுக்கும், ஏனைய துறைகளுக்கும் குந்தகம் ஏற்படுத்தப்படும் என்று தமிழ் மக்கள் ஒருபோதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

பாதுகாப்புத் தவிர்ந்த வாழ்க்கையின் ஏனைய துறைகளில் இத்தனை கஷ்டங்களும் தடைகளும் வரும் என்று அவர்கள் நினைத்திருக்கவும் இல்லை.

தங்கள் ஜீவனோபாயத்துக்கு வழி செய்யும் தொழில் துறைகளில் தடைகள், நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் வரும் என்றும் அவர்கள் நினைத்திருக்கவில்லை.

இலங்கை அரசுதான் பொருளாதாரத் துறையில் தமிழர்களை நசுக்குவதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றியது என்றால், பொருளாதாரத்துறையில் நசுக்குவதால் தமிழர்களின் அரசியல் எழுச்சியை அடக்கலாம் என்று நினைத்தும் அப்படிச் செய்தது எனலாம், தொடர்ந்தும் தமது தொழில் வாய்ப்புகளை இழக்க நேரிடும் என்று தமிழ் மக்கள் எண்ணியிருந்ததில்லை.

ஆனால் அமைதியை நிலைநாட்டுதல், பாதுகாப்பு நடவடிக்கை என்பவற்றின் விளைவாகத் தமிழர்கள் பரவலாகப் பல பாதிப்புகளைத் தொடர்ந்து அனுபவிக்கும் துரதிர்ஷ்டம் உண்டாகி இருக்கிறது. இது மிகவும் கவலைக்குரியது.

பசளை விநியோகம், எரிபொருள் தருவிப்பு, ரயில் சேவை, தபால் சேவை போன்ற விடயங்களில் அமைதிப் படையினர் மக்கள் நலன் பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுத்ததை மறந்து விடுவதற்கு இல்லை.

ஆனால் விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்களைச் செய்வதற்கு அவ்வப்போது விதிக்கப்படும் தடைகளால், அல்லது கட்டுப்பாடுகளால் மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை எடுத்துச் சொல்ல வேண்டியதும் அவசியமாகிறது.

முல்லைத்தீவைப் பொறுத்தவரையில், அங்கு வாழ்பவர்களின் பிரதான தொழில் விவசாயம். சிறுபோகத்தில் முல்லைத்தீவில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் இன்னும் சரியாகக் கணக்கிடப்படவில்லை. ஒவ்வொரு விவசாயிக்கும் பெரும்போகத்தின் போது பயிர் செய்வதற்கு முதலிட முடியாத கஷ்டம்.

என்றாலும் கடன்பெற்றாவது பெரும் போகப் பயிர்ச் செய்கையில் ஈடுபடாவிட்டால் வயிற்றுப் பசி போக்குவது எப்படி? அது கருதி தொழில் செய்ய முனையும் வேளை, அதற்குத் தடங்கலாகத் தடைகள், கட்டுப்பாடுகள் இருந்தால் எப்படி மனம் ஒன்றித் தொழில் செய்ய முடியும்? அதற்கென முதல் விடுவதற்குத் தான் மனம் வருமா? தொழில் சிறக்கும் என்று எப்படி நம்பிக் கடன் வாங்குவது?

முல்லைத்தீவில் மட்டுமல்ல மற்றெந்தப் பகுதியிலும், எந்தத் தொழிலுக்கேனும் தடைகள், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டால் கஷ்டப்படுபவர்கள் மக்கள். மொத்தத்தில் பாதிக்கப்படுவது தமிழ்ப்பகுதியின் பொருளாதாரம். அது ஏற்கனவே நொந்தவனை மேலும் நோகச் செய்வதாகும்.

இதனை மனதில் இருத்தி, மக்களுக்கு ஜீவனோபாயம் தரும் தொழில்களைச் செய்வதற்குத் தடைகள், கட்டுப்பாடுகள் விதிப்பதை முற்றாகத் தவிர்க்கவேண்டும் என அமைதிப்படையினரிடம், மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

## சிலியில் வாக்கெடுப்பு

சந்தியாகோ, அக் 6

சிலியில் நடந்த சர்வசன வாக்கெடுப்பில் ஏராளமான வாக்காளர்கள் வாக்களித்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அரசுத் தலைவர் ஜெனரல் பினோசேயை மேலும் எட்டு ஆண்டுகளுக்கு ஆட்சி செய்ய அனுமதிப்பதா என்பதை தீர்மானிக்கவே இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்குகள் எண்ணப்படுவது நேற்று ஆரம்பமானது. (எ)

ஜா, ஜெ, நா.

# அ. தி. மு. க 3 அணிகளும் ஒன்று சேர வாய்ப்பு உண்டு

## முன்னாள் அமைச்சர் 'திரு' தகவல்

மதுரை, அக் 6

" அ. தி. மு. க. வின் மூன்று அணியினரும் ஒன்று சேர வாய்ப்பு உள்ளது " என்று முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு நேற்று மதுரையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அதன் விபரம் வருமாறு:

கேள்வி; அ. தி மு. க பல அணிகளாக சிதறி இருப்பதால் தேர்தலில் தி. மு. க. விற்கு வெற்றி வாய்ப்பாகிவிடுமா?

பதில்: அதி மு. க. வை சேர்ந்த அனைவரையும் ஒன்று சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். முதற்கட்டமாக ஜானகி அணியினர் இரட்டை இலை சின்னம் வாங்க தேர்தல் கமிஷனிடம் கையெழுத்துப் போட்டு கொடுத்துள்ளோம்.

கே: ஜெயலலிதா அணியையும் ஒன்று சேர்க்கவாய்ப்புண்டா?

ப: முதலவர் பதவி எனக்கு வேண்டாம் என்று ஜெயலலிதா கூறினால் எல்லாரும் ஒன்றுசேரலாம். அவர் எப்போதும் முதல்வராகக்கூடாது என்று கூறவில்லை அரசியலில் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்று முதல்வராக வரலாம் முதல்வர் பதவி வேண்டாம் நான் கட்சிப் பணியாற்றுகிறேன் என்று ஜெயலலிதா கூறினால் இகனால எல்லா அணிகளும் (ஜா, ஜெ. நெ. ஒன்று சேர வாய்ப்புள்ளது. ஜெயலலிதா கொள்கை பரப்பு செயலாளராக கட்சிக்கு பயன்படுவார் என்ற நோக்கத்தில்தான் எம். ஜி ஆர். இவரை கட்சிக்கு கொண்டு வந்தார். 45 வயதில் தான் ஜெயலலிதா முதல்வராகவரவேண்டும் என்று இல்லை மக்கள் யாரை தேர்ந்தெடுக்கிறார்களோ அவர் முதலவராக வரலாம்.

கே. இதை ஆர் எம். வீரப்பன் ஏற்றுக்கொள்வாரா?

ப ஒவ்வொருவரும் ஒரு தியாகம் செய்ய வேண்டும். ஆர் எம் வீரப்பனும் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும். எம் ஜி ஆர். காலத்திலேயே ஜெயலலிதாவைகொள்கை பரப்பு செயலாளராக ஆர். எம் வீ. யும் ஏற்றுக்கொண்டு தானே இருந்தார்.

கே. நால்வர் அணியினரும் தனியாகத் தான் இருப்போம் என்று நெடுஞ்செழியன் கூறியுள்ளார். நீங்கள் இரட்டை இலை சின்னத்தை ஜானகி அணியினருக்கு கொடுத்தால் நீங்கள் எப்படி தேர்தலில் நிற்பீர்களா?

ப: இப்போதைக்கு ஜெயலலிதாவை பொதுச் செயலாளர் பதவியில் இருந்து தான் நீக்கினோம். கட்சியை விட்டு நீக்கவில்லை ஏற்கனவே அ. தி மு க ஜானகி. ஜெயலலிதா தலைமையில் இரண்டாக உடைந்தது. இப்போது நாங்களும் (நெடு. அணி) எங்களுக்குத்தான் இரட்டை இலை சின்னம் வேண்டும் என்று கேட்டால் மூன்று பேருக்கும் இந்த சின்னம் கிடைக்காமல் போக வாய்ப்புள்ளது. ஜானகி அணிக்கு எம் பி. க்களின் பெரும்பான்மை ஆதரவு உள்ளது. பொதுக்குழு உறுப்பினர்களின் ஆதரவுதான் இல்லை.

கே: ஜானகியை முதல்வராக ஏற்றுக் கொள்வீர்களா?

ப: யார் முதல்வராக வரவேண்டும் என்பதை விட யார் வரக்கூடாது என்பதில் தான் உறுதியுடன் இருக்கிறோம் தி. மு. க. ஆட்சிக்கு வரக்கூடாது என்பது தான் அடிப்படை நோக்கம் எனவே, அதற்கேற்றவாறு செயற்படுகின்றோம்.

கே: ஜெயலலிதா அணியின் தலைவர்களுடன் நீங்கள் தொடர்பு கொள்வதாக கூறப்படுகிறதே?

ப, ஜெயலலிதா அணியில உள்ள முன்னணி தலைவர்கள் தான் எங்களுடன் தொடர்பு கொண்டுள்ளனர். அவர்கள் எங்கள் பக்கம் வந்தால் ஏற்றுக் கொள்வோம்

கே: ஜெயலலிதா வந்தாலும் ஏற்றுக்கொள்வீர்களா?

ப: அவர் வந்தாலும் ஏற்றுக்கொள்வோம். தி. மு க தீய சக்தி என்று எம் ஜி. ஆர். ஏற்படுத்திய உணர்வு இன்னும் மக்களிடம் உள்ளது. நாங்கள் பிரிந்திருப்பதன் மூலம் கருணாநிதி வெற்றி பெற்று விடக்கூடாது என்பதற்காகத்தான் நாங்கள் ஒன்று சேர முயற்சி செய்கிறோம். (எ- 4)

### இராணுவ நடவடிக்கை

ஸாம்பியா, பொட்ஸ்வானா ஆகிய கறுப்பு இன நாடுகள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று தென் ஆபிரிக்க அரசு எச்சரித்துள்ளது.

இரண்டு நாடுகளும் கறுப்பு இனப்போராளிகளுக்குபுகலிடமும் உதவியும் அளித்து வருவதாக தென்ஆபிரிக்க நிறவெறி அரசு குற்றஞ்சாட்டியுள்ளது. (எ)

### நாடாளுமன்றக் கூட்டம்

புதுடில்லி அக்-6

இந்திய நாடாளுமன்றத்தின் மழைகாலக்கூட்டத்தொடர் எதிர்வரும் நவம்பர் இரண்டாம் திகதி ஆரம்பமாகும்.

ஐந்து வாரங்கள் நீடிக்கும் இக்கூட்டத் தொடர் டிசம்பர் 7ஆம் திகதியுடன் முடிவடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

எம். ஜி. ஆருக்கு கொடுத்த

# சத்தியத்தைக் காப்பாற்றவே உயிருடன் இருக்கிறேன்

## ஜெயலலிதா பேச்சு

தஞ்சை, அக். 6

"புரட்சித் தலைவருக்கு செய்து கொடுத்த சத்தியத்தை காப்பாற்றவே உயிருடன் இருக்கிறேன்" என்று ஜெயலலிதா கூறினார்

தஞ்சை மாவட்டத்தில் இர்வின் பாலம் அருகே அ. தி. மு. க. கொடியை ஏற்றிவைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

அண்ணாவின் இதயக்கனி என்று சொல்லப்பட்ட நமதுஇதயத்தெய்வம் -புரட்சித் தலைவர் மறைந்து 9 மாதம் ஆகிறது.

புரட்சித்தலைவரால் அரசியலுக்கு கொண்டு வரப்பட்ட நான், இன்று அபலையாக இருக்கிறேன்.

புரட்சித் தலைவர் மறையும் முன்பகாக, "எனக்கு (எம் ஜி. ஆர்.) பின் அ. தி மு க. வை நீ நடத்திச் செல்ல வேண்டும், லட்சக்கணக்கான தொண்டர்களுக்கு வழிகாட்ட வேண்டும். என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களை பாதுகாக்க வேண்டும். தமிழகத்தில் உள்ள ஏழை-எளிய மக்களின் முன்னேற்றத்துக்கு பாடுபடவேண்டும் என்று புரட்சித்தலைவர் எனக்கு கட்டளையிட்டார்.

புரட்சித் தலைவர் என்ன சொன்னாரோ அதை நிறைவேற்றுவதற்காகத் தான் இன்று அரசியலில் இருக்கிறேன். உங்கள் ஆதரவைத் தேடி வந்திருக்கிறேன்.

புரட்சித் தலைவருக்கு கொடுத்த சத்தியத்தை காப்பாற்றுவதற்காகத் தான் நான் இன்னும் உயிருடன் இருக்கிறேன்.

என்னை அழித்தே தீருவது என்று செயல்படுகிறார்கள். இந்த ஜெயலலிதா உயிரை பணயமாக வைத்துத்தான் சுற்றி வருகிறாள்.

நான், காசு பணத்துக்கு ஆசைப்படவில்லை. ஆசைப்பட அவசியமும் இல்லை.

புரட்சித் தலைவரை பயன்படுத்தி ஊழல் செய்து, சொத்து சேர்க்கவில்லை. அம்மா திரி சொத்து சேர்க்க வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. புரட்சித்தலைவர் கூறியபடி. ஏழை மக்களுக்கு தொண்டாற்றுவதற்காக என்னை அர்பணித்துக் கொண்டிருக்கிறேன்.

இவ்வாறு சொல்லிவிட்டு "எனக்கு நீங்கள் துணையாக இருப்பீர்களா" என்று, ஜெயலலிதா கேட்டார். உடனே" துணையாக இருக்கிறோம். துணையாக இருக்கிறோம்" என்று கூட்டத்தினர் குரல் எழுப்பினர்கள். (எ-4)

### அரபாத் புதுடில்லி விஜயம்

புதுடில்லி, அக் 6

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் நேற்று புதுடில்லிக்குவிஜயம் செய்து, பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்தார். (எ)

# எய்ட்ஸ் நோயின் தன்மைகள் என்ன?

## அறிகுறிகள் தென்பட்டால் யாழ் ஆஸ்பத்திரி 33 ஆம் இலக்க அறைக்கு செல்ல ஆலோசனை

எய்ட்ஸ்(AIDS)ஓர் அபூர்வ வியாதி இந்நோய் பற்றிய அறிவுரைகளை யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என். கனகசபை பொது மக்களின் நலன் கருதி எமது வாசகர்களுக்கு வழங்கியுள்ளார்.

நாம் எல்லோரும் கொடிய எய்ட்ஸ் நோய் பற்றிய அபாயங்களையும், விளக்கங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். சமுதாயத்திலே பாதிக்கப்பட்டவர்களின் மனோநிலை, பயம், சமுதாயக் கண்ணோட்டத்தில் தப்பெண்ணம் என்பன பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

எயிட்ஸ் என்பது உடலிலுள்ள எதிர்ப்புச் சக்தித்தன்மை சரியான முறையில் இயங்காதிருக்கும் நிலைப்பாடு

இதன் காரணமாக இந்நோயால் பீடிக்கப்பட்டவர்கள் பலசாதாரண வருத்தங்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாதுள்ளது.

இது ஒரு பயங்கர நோய் மட்டுமல்லாது மரணத்தில் முடிவதுண்டு.

இந்த நோய் நோயாளியிடமிருந்து பாலியல் உறவு மூலம் இன்னொருவருக்கு தொற்றக் கூடியது.

ஆனால் இது ஒரு பரம்பரை வியாதி அல்ல.

சாதாரண நோய்களிலிருந்து இந்நோயாளி பூரணமாக எதிர்ப்புச் சக்தியை இழந்து விடுவார்.

எயிட்ஸ் நோயாளி களது சுவாசப்பை சமீபாட்டு முறைகள் நரம்புகள், சருமங்கள், ஆகியன பாதிக்கப்படுகின்றன.

சாதாரணமாக இரண்டுவிதமான நோய்கள் எய்ட்ஸ் நோயாளிகளில் காணப்படும்.

★ கபோசிஸ் சக்குரோமா என்ற ஒருவகை புற்றுநோய். இது முக்கியமாக சருமப்பகுதியையும் மற்றய உறுப்புக்களை பாதிக்கும்.

★ நியுமோனியா - சுவாசப்பையை கடுமையாகப் பாதிப்பது

இந்நோய் HIV என்ற வைரஸ் மூலம் பரவுகிறது

மனித உடலில் எதிர்ப்புச் சக்தியை அழிக்கும் தன்மையுடையது.

இதன் காரணமாகச் சாதாரண நோய்களைக் கூடத்தாங்கும் சக்தியை உடம்பு இழந்து விடுகிறது.

### பீடிக்கப்பட்டோர் விகிதம்

இந்த வைரசால் பீடிக்கப்பட்டவர்களில் 60 - 65 வீதமானோர் ஐந்தரை ஆண்டுகளுக்குப்பின் இந்நோயில் இருந்து விடுபடலாம்.

அதே நேரத்தில் இந்நோயாளிகள் மூலம் சுகதேகிகளுக்கும் தொற்றும் அபாயமுண்டு

20 - 25 வீதமானோர் பயங்கரத்தன்மையில் சிறிது குறைந்து காணப்படுவார்கள்.

5-10 வீதமானோர் கடுமையாகத் தாக்கப்பட்டவுடன் மரணமடைவர்.

இதுவரை இந்நோயின் வைரஸ் பலதரப்பட்ட நிலைப்பாட்டை எப்படி உருவாக்கிறது என்பது பற்றி ஒருவருக்கும் தெரியாது.

### நோயின் அறிகுறிகள்

★ சுரப்பிகள் வீக்கமடைதல் - விஷேசமாக கழுத்து. அக்குள் ...

★ ... படைதல்.

★ எதிர்பாராது எடை குறைதல்-2 மாதத்திற்குள் 10 இறாத்தல் எடை குறைதல்.

★ இரவு வேர்வையுடன கூடிய காய்ச்சல்-பல கிழமைகள் தொடரும்.

★ வயிற்றோட்டம் - காரணம் தெரியாமல் ஒரு கிழமைக்கு மேல் தொடரும்.

★ மூச்சுத் திணறலுடன கூடிய வறண்ட இருமல் ஒருமாதத்திற்கு மேலாக நீடித்தல்.

★ சரும வியாதிகள்- புதிதாக உருவாகும் ரோஸ்நிற கத்தரிப்பூநிற கொப்புளங்கள் முக்கியமாக வாயிலும் கண்புருவத்திலும்.

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் சாதாரணமானவை இவற்றில் ஏதாவது இருந்தால் எயிட்ஸ் நோய் இருப்பது என்ற சடுதியான முடிவுக்கு வந்து விடாதீர்கள்.

### ஞாபகத்தில் வைக்க வேண்டியவை

★ எயிட்ஸ்ஓர் அபூர்வ வியாதி.

★ மேற் குறிப்பிட்ட பல அறிகுறிகள் நீண்ட காலமாகக் காணப்படின் எயிட்ஸ் காரணமாக லாம்.

★ மேற் குறிப்பிட்ட அறிகுறிகள் சுரப்பிகளின் வீக்கத்தால் ஏற்படும் காய்ச்சலாகவும், களைப்பு எடை குறைதல் சயரோக அறிகுறிகளாகவும் தென்படும்.

### எயிட்ஸ் வைரஸ் எப்படி தென்படுகிறது?

எயிட்ஸ் வைரஸ் உடம்பிலிருந்து [illegible] இரத்தம், விந்து கர்ப்பப்பை வாசலினூடாக வெளிவரும் திரவகம் மூலம் இந்நோய் ஏற்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### வைரஸ்கிருமி எப்படித் தொற்றுகிறது?

★ நெருக்கமான பாலியலுறவு.

★ இந்த வைரஸ் உள்ள இரத்தமேற்றல்

★ நோயுள்ள தாய் மூலமாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு

கூடிய எண்ணிக்கையானோருடன் பாலுறவு கொள்பவர்களுக்கு இந்நோய்தொற்றும்வாய்ப்பு கூடுதலாகவுள்ளது

இக் கிருமிகள் ஆண், பெண் உறவு மூலமாகவும், தன்னினச்சேர்க்கை மூலமாகவும் தொற்றும்.

இவ் வியாதி உள்ளவர்களுக்கும் பாவிக்கும் ஊசி போன்ற உபகரணங்களை சரியான முறையில் தொற்று நீக்கம்செய்யாவிட்டாலும் நோய் தொற்றும்

நோயுள்ளவருடன் ஆணோ. பெண்ணோ உடலுறவு கொண்டால் இந்நோய் தொற்றும்.

### எப்பொழுது தொற்றாது

★ கைகுலுக்கல், எச்சில், கண்ணீர் மூலம் இந்நோய் தொற்றாது

★ நோயாளி பாவிக்கும் உணவு, உடை, உபகரணங்கள் மூலமும் இந்நோய் தொறாது.

★ நீச்சல் தடாகம் மூலமும் இந்நோய் தொற்றாது.

### தொற்றிருக்க என்ன செய்ய வேண்டும்?

★ ஒருவனுக்கு ஒருத்தி என்ற முறையில் உடல் உறவு கொள்ளல்.

★ முறைகேடான உறவு கொள்ளாமை.

★ இயற்கைக்கு மாறான பாலுறவு கொள்ளாமை.

இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலம் இந்நோய் உண்டா இல்லையா என்பதை உறுதிப்படுத்தலாம்.

உறுதி செய்யப்பட்டால் யாழ் போதனா வைத்தியசாலை 33 ஆம் இலக்க அறைக்கு சிகிச்சைக்காகச் செல்லவும்.

மேலும் இது பற்றி தகவல் அறிய விரும்பினால் தொற்றுநோய்த்தடுப்பு நிபுணர், யாழ் சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும். (ச- 18)

ரூ 22 லட்சம் செலவில்

## பம்பைமடு கிராமம் மின்சாரம் பெற்றது

வவுனியா அக் 7

ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 22 லட்சம் ரூபா செலவில் பம்பைமடு கிராமத்துக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது

வைபவ ரீதியாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் வவுனியா மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபரும் புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளருமான திரு. கே. சி. லோகேஸ்வரன் கலந்து கொண்டு சம்பிரதாயபூர்வமாக மின்குமிழை இயக்கி ஒளியேற்றினர்.

வவுனியா அரசாங்க அதிபர் திரு. ஸ்ரீ லங்காநேசன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. பி. கமலநாதன, நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு ஆறுமுகம். உதவி அரசாங்க அதிபர் திரு. கே. ஐயம்பிள்ளை, திட்டப்பிரதி பணிப்பாளர் திரு. ஆர். ரங்கராஜன் ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். (இ- 64)

## தெல்லிப்பழை, ஏழாலை, கட்டுவன் பகுதிகளில் கோமாரி நோய் தடுப்பு

பலாலி, அக் 7

ஏற்கனவே பதிவு செய்து கொண்ட தெல்லிப்பழை கிழக்கு, ஏழாலை வடக்கு கட்டுவன் வறுத்தலை விளான் பகுதி மாடு வளர்ப்போர் கோமாரித்தடுப்பு மருந்து ஏற்றுவதற்கு எதிர்வரும் 18 ஆம் திகதி பகல் 2 30 மணிக்கு கட்டுவன் புலம் மகா வித்தியாலயத்துக்கு தமது மாடுகளைக் கொண்டு வருமாறு கோரப்படுகின்றனர்.

வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சபை செயலாளர் திரு. க. வேலாயுதம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பாடசாலையையும் சமூகத்தையும் இணைக்கும் திட்டத்தின் கீழ் பாடசாலை அபிவிருத்திச்சபை மேற்கொள்ளும் முதலாவது முயற்சியாக இது கருதப்படுகிறது. (இ- 119)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மல்லி கலந்த கோப்பி

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட மல்லிக் கோப்பி இப்போது 100gr/ பக்கட்டுக்களில் வெளிவருகிறது.

1 பக்கட்விலை 10/ ரூபா வியாபாரிகளுக்கு விசேட கழிவுகொடுக்கப்படும்.

**அண்ணா கோப்பிக் கடை,**
யாழ்ப்பாணம்.



# உதயன்

07 - 10 - 1988 வெள்ளிக்கிழமை



சாயிபாபா ஸ்ரிக்கர்

அண்ணா மோல்ட்டொபி லேபல்களில் 50 வெற்று லேபல்களைக் கொடுத்து 1 சாயிபாபா ஸ்ரிக்கர் அல்லது ஒரு கொப்பியை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்:

**அண்ணா தொழிலகம்,**
இணுவில்.


### முஸ்லிம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி) நின்ற ஏனையோர் தப்பியோடிவிட்டதாகக்கூறப்படுகின்றது. ஜகுபாரின் சடலத்தைப் படையினரே கொண்டுசென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையில் வவுனியா - யாழ் வீதி அரசினர் பண்ணைப்பகுதி படை முகாமில் சகவீரர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஜவான் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. (ஒ-164)

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

எம்மிடம் 5000 சாக்குகள் வரை கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்குண்டு. விண்ணப்ப முடிவு திகதி 15-10-1988. விண்ணப்பப் படிவங்களைகாரியாலயத்தில் 14-10 1988 வரை பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.

(C 402)

## நன்றி ஆராதனை

காலம் சென்ற திருமதி தங்கராணி போல் அம்மையாரின் பேரில் நன்றி செலுத்தும் ஆராதனை இன்று (வெள்ளி) 7-10-88 மாலை 4மணிக்குபுதுவாழ்வு நிலையம்ஆனைக்கோட்டை செபாலயத்தில் நடைபெறும். அன்பர்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.

புதுவாழ்வு நிலையத்தார்,
ஆனைக்கோட்டை.

(7078)


**BECON**
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**A/L 89**
**கலை, வர்த்தகம்**
**Day Class**

பொருளியல்: வரதராஜன்
கணக்கியல்: மரியதாஸ்
வர்த்தகம்: ரட்ணம்
அளவையியல்: S. S. மனோகரன்
தமிழ்: தாஸ்
இந்து நாகரிகம்: ஜோதீஸ்வரன்

ஆரம்பம்: 10- 10- 88
திங்கள் காலை 9. 00

(C/382)


## ஓர் ஆண்டு முடிந்த போது---

05 10- 1987 இல் ஸ்ரீலங்கா [illegible] இராணுவப்படையால் கைது செய்யப்பட்டு ஏமாற்றப்பட்டதினால் எம் தமிழ் மரபுக்கேற்ப சயனைட் அருந்தி வீர மரணமடைந்த எமது போராளிகளான [illegible] பிராந்திய தளபதியும், யாழ். தளபதியுமாகிய லெப்ரினன்ட் குமரப்பா, திருமலை தளபதி லெப்டினட் கேர்ணல் புலேந்திரன், மேஜர் அப்துல்லா, கப்டன் நளன், கப்டன் மிரேஷ், கப்டன் பழனி, அன்பழகன், தவக்குமார், ஆனந்தகுமார் றெஜிஞேல்ட், கரன், ரகு ஆகியோருக்கு எமது வீர வணக்கங்கள்.

— நாவற்குழி வாழ் மக்கள்

( 6962 )

# சாகும்வரை உண்ணாவிரத...

(1 ம் பக்க தொடர்ச்சி) தைத் தொடர்ந்து நாம் ஆயுதங்களை ஒப்படைக்கத் தயாராக இருப்பதாகவும், தமிழ் பேசும் மக்களின் நலன்களையும், அபிலாஷைகளையும் பேணிப் பாதுகாக்கக்கூடிய வகையில் இந்திய – ஸ்ரீலங்கா ஒப்பந்தம் அமுலாக்கப்படுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் எமது நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியும், தேர்தல் நடைமுறையில் பங்குபற்ற எமது சம்மதத்தை வெளிப்படுத்தியும் 29ஆம் நாள் அன்று எமது இயக்கத்தின் சார்பாகக் கடிதம் ஒன்றை நான் கையொப்பமிட்டு தங்கள் பிரதிநிதிகளிடம் கையளித்தேன்.

இந்தப் பேச்சுவார்த்தையின் விவரத்தை நேரில் எமது தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்கு தெரியப்படுத்தி அவரது முடிவுகளைப் பெறுவதற்காகவும் ஐந்துநாள் போர்நிறுத்தம் ஒன்றை நாம் குறிப்பிடும் ஓர் பகுதியிலாவது மேற்கொள்ளுமாறு கோரியிருந்தோம்.

ஆனால் இக்கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு பின்னர் திடீரெனப் பேச்சுவார்த்தை நிறுத்தப்பட்டது; தொடர்ந்து நாம் கைது செய்யப்பட்டு தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டோம்.

### வாய்ப்புகள் தடுக்கப்பட்டன

பேச்சுவார்த்தையில் எமது இயக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய என்னைக் கைதுசெய்து சிறையில் அடைத்ததன் மூலம் சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் தடுக்கப்பட்டன.

பின்னர் இந்திய அரசு தன்னிச்சையாகப் பத்து நாள் போர் நிறுத்தம் அறிவித்ததில் மாத்திரம் இணக்கமான தீர்வு ஒன்று உருவாவதற்குப் போதுமானதாக இருக்கவில்லை.

இவ் வேளையில் என்னையும், என்னுடன் கூட இருக்கும் சக தோழர்களையும் விடுதலை செய்து பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு எமது தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் அறிவித்திருந்தார். இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலேயே போர் நிறுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

நாம் சமாதானத்திற்கு எதிரானவர்கள் அல்லர். நிரந்தர சமாதானம் ஒன்றையே நாம்வேண்டி நிற்கின்றோம் சமாதான தூதுவனாக அழைத்துச் செல்லப்பட்ட எமது தோழர் ஜொனி அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சமாதானத் தீர்வு ஒன்று காண பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த நானும் எனது தோழர்களும் காரணம் எதுவுமின்றி கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டோம்.

### பொய்யான குற்றச்சாட்டுகள்

எம்மீது ஆதாரம் எதுவுமற்ற, பொய்யான சற்பனையான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. நாம் இங்கிருந்து இந்தியாவின் பாதுகாப்பிற்குப் பங்கம் ஏற்படும் வகையிலோ, இந்தியாவின் ஐக்கியத்திற்குக் குந்தகம் ஏற்படும் வகையிலோ, இந்தியாவின் மக்களுக்கு விரோதமாக சமூக விரோத நடவடிக்கைகள் எதிலுமோ ஈடுபடவில்லை. ஈடுபட நினைத்ததுமில்லை.

ஈழத்து மக்களால் புறக்கணிக்கப்பட்டு ஆனால் இங்கு சகல வசதிகளும் கொடுக்கப்பட்டு வளர்க்கப்படும் சமூக விரோதக் கும்பல்கள் இங்கு பல சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது, விடுதலைப் புலிகள் என்பதாகப் பிரசாரப் படுத்தப்பட்டது.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த எவரும் இத்தகைய சம்பவங்கள் எதிலும் ஈடுபடவில்லை என்பதை தமிழ் நாட்டின் பொறுப்பு வாய்ந்த பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்த அறிகைகள் வெளிப்படுத்தும்.

தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம் இந்திய அரசுக்கும், இந்திய அதிகாரிகளுக்கும் தெரியக் கூடியதாகவும், இந்திய அரசின் அனுசரணையுடனேயே கடந்த ஐந்து வருட காலமாக இங்கு தங்கியிருந்து வருகின்றோம்.

ஸ்ரீலங்கா இராணுவத்துடனான மோதலில் காயமுற்ற எமது தோழர்கள் இங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்கள். நான் இந்திய இராணுவ ஹெலிகொப்டரிலேயே அழைத்து வரப்பட்டேன்.

ஈழத்தில் கைதிகளாகப் பிடிக்கப் பட்ட இந்திய இராணுவத்தினர் இருமுறை நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யப்பட்டபோது, அவர்களைப் பொறுப்பேற்கச் சென்ற இந்திய அதிகாரிகள் இங்கிருந்து எமது தோழர்கள் சிலரையும் இராணுவ விமானத்தில் அழைத்துச் சென்றுமீண்டும்கொண்டு வந்து இங்கு விடப்பட்டனர்.

நாம் ஒருபோதும் இங்[illegible] படியோ அல்லது இங்கிருந்து வெளியேறும் படியோ கேட்கப்படவில்லை.

### அக்டோபரின் பின்னர்

எனினும் 1987 அக்டோபரில் இந்திய இராணுவத்துடனான துரதிருஷ்ட வசமான மோதல் ஆரம்பித்ததில் இருந்து நாம் இங்கிருந்து வெளியேறுதபடி எமது வீடுகளில் தடுப்புக் காவல் போடப்பட்டது.

தடுப்புக் காவலில் வைத்திருப்பது ஜனநாயகத்திற்கு விரோதமானது இந்த நடவடிக்கை எம்மையும், எமது இயக்கத்தினையும் சிறுமைப் படுத்தி எமது போராட்டத்தை மழுங்கப்படுத்தும் நோக்கத்தை உடையது.

அஹிம்சையின் பிறப்பிடமாகிய, அஹிம்சையின் காவலனாகிய இந்திய மண்ணில் நான் பின்வரும் கோரிக்கைகளை முன் வைத்து நீர் கூட அருந்தாது சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்து உள்ளேன்.

### கோரிக்கைகள்:

1. இந்திய மண்ணில் நாம் ஏதாவது குற்றம் செய்திருந்தால், அக் குற்றம் என்ன என்பதை வெளிப்படுத்தி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட வேண்டும்.

2. அவ்வாறு வழக்குத் தொடரப்பட முடியாதாயின் எம்மை விடுதலை செய்து தமிழீழத்தில் எமது போராளிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

எனது கோரிக்கைகள் 10- 10– 1988 ஆம் திகதி காலை 9 மணிக்கு முன்னர் நிறைவேற்றப்படாவிட்டால், அந்த நேரத்தில் இருந்து சென்னை மத்திய சிறைச்சாலையில் எனது அஹிம்சைப் போராட்டத்தை ஆரம்பிப்பேன்.

இக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படா விட்டால் என்னைத் தொடர்ந்து எனது சக போராளிகள் இப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவார்கள்.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்தில் திரு. கிட்டு தெரிவித்துள்ளார் (இ)

### நல்லூரில்

(1 ம் பக்க தொடர்ச்சி) செய்ததாகவும்.

அதனைத் தொடர்ந்து படையினர் பதில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அறிய வந்தது,

இச்சம்பவத்தில் படையினர் மூவர் காயமடைந்ததாகச் சொல்லப்பட்ட போதிலும் இந்தச் செய்தி எழுதப்படுவரை ஊர்ஜிதமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை (ஒ–க)

### பல்கலைகழ...

(1ம் பக்கத் தொடர்ச்சி) கொழும்பு, மொறட்டுவ பல்கலைக்கழகச் சுவர்களில் அரசு எதிர்ப்பு சுலோகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் அதிக அளவில் காணப்படுகின்றன.

அரசாங்கம் கடந்த 12 ஆம் திகதி பல்கலைக் கழகங்களைத் திறக்க முற்பட்டு மாணவர்களின் வரவின்மையால் திறக்க முடியாமல் போனது தெரிந்ததே. (ஒ-3)

### கூட்டணி....

(1ம் பக்கத் தொடர்ச்சி) கூடாது.

இந்திய–இலங்கை ஒப்பந்தத்தினால் கிடைக்கும் லாபங்களை உறுதிப்படுத்துவதற்கு இது உதவும்.

இலங்கைத் தமிழர்கள் இந்தியாவின் பங்குப் பணியை உணர்ந்திருக்கிறார்கள். அதை நிலை நாட்டிக் கொள்ளவே விரும்புகிறார்கள் தெரிந்தெடுக்கப்பட்டமாகாண சபை மூலம் அதிகாரப் பகிர்வை விரிவாக்கிக் கொள்ள வாய்ப்பு உண்டு''

ரெலோ அறிக்கை

இதேவேளை–

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில், தாம் தேர்தலில் பங்குபற்றப் போவதில்லை என்று தெரிவித்தது தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்செயல்களால் தமிழ் மக்கள் அச்சமும், குழப்பமும் அடைந்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. (அ-எ)

### தேர்தலில் ஈ.பி...

(1ம் பக்கத் தொடர்ச்சி) வேண்டிய கடைசித் தினமான இம் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும்.

தேர்தல் நடைமுறையில் இருந்து பின்னுக்குச் செல்வது என்ற பேச்சுக்கே இடமில்லை—இப்படி திரு. வரதராஜப் பெருமாள் தெரிவித்தார். (ஒ–எ)

### யாழ்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி இணுவில், சுன்னாகம் பகுதிகளிலுள்ள பாடசாலை மாணவர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட ஏற்பாடு செய்துள்ளது

இது தொடர்பாக யாழ். மாணவர் ஒருங்கிணைப்புக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:—

இலங்கை, இந்திய ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டு ஓராண்டு நிறைவு செய்யப்பட்ட பின்பும் இட்படியாக மாணவர்கள் கைது செய்யப்படுவது முறைகேடானதும் கண்டிக்கப்படக் கூடியதுமாகும். இதை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்

இந்திய அமைதி காக்கும் படையினரால் எதுவித காரணமுமின்றி மாணவர்கள் கைதுசெய்யப்படுவதை நிறுத்தக் கோரியும், ஸ்ரான்லி கல்லூரி மாணவன் சிவபாதவிருதயரை விடுதலை செய்யக் கோரியும், ஸ்ரான்லி மாணவர்கள் நடாத்தும் போராட்டங்களிற்கும் சகல மாணவர்களையும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்

இதன் முதல் கட்டமாக இன்று ஏழாம் திகதி யாழ் மாநகரப் பகுதியிலுள்ள பாடசாலைகளும் இணுவில், சுன்னாகம் பகுதியிலுள்ள சகல பாடசாலைகளும் வகுப்புக்களை பகிஷ்கரிக்கவுள்ளனர். மேற்படி இப் போராட்டத்திற்கு சாதகமான முடிவு எமக்குக் கிடைக்காத பட்சத்தில், மாணவர்களின் போராட்டமானது பல வழிகளிலும் விஸ்தரிக்கப்படும்.

எனவே இப்போராட்டத்திற்கு சகல மாணவர்களையும், ஆசிரியர்களையும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு பணிவாக வேண்டிக் கொள்கிறோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### 45 புளொட்.......

(1ம் பக்கத் தொடர்ச்சி) களில் மாற்று இயக்கத்தினரின் உதவியுடனேயே தமது உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும், தொடர்ந்தும் இப்பகுதிகளில் புளொட் இயக்கத்தினரை இந்தியப் படையினர் தேடிவருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-164)

### 795 பஸ் சேவை---

(1 ம் பக்க தொடர்ச்சி) யாழ்ப்பாணம் சாலையின் முகாமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை புரட்டாதிச் சனி விரதத்தை முன்னிட்டு 7, 8, 14, 15 ஆகிய திகதிகளில் 795 பாதையில் விசேட பஸ் சேவைகள் இடம் பெறும். (ஒ-க)

### அரசின் பணிப்பு

இவ்வருட இறுதி வரை பாவனைப்பொருள்களின் விலைகளை அதிகரிக்க வேண்டாம் என்று கூட்டுத்தாபனங்கள், அரசு கட்டுப்பாட்டில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு அரசு பணிப்புரை அனுப்பியிருக்கிறது.

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் இப் பணிப்புரையை அரசு அனுப்பி வைத்து உள்ளது. (ஒ-எ)

## இன்று தொடர்மதிப்பீடு கருத்தரங்கு

ஆசிரியர்களின் நலன் கருதி வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் ''பாடசாலைகளில் தொடர் மதிப்பீடு'' என்னும்பொருள்பற்றிய கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது

உதவிப் பரீட்சை ஆணையாளர் திரு. ஏ. சின்னத்துரை கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுவார். (ச)

## மரண அறிவித்தல்கள்

### திரு. அ. ஸ்ரீஸ்கந்தராஜா
செல்வம் (ஜெர்மனி)

அ. ஸ்ரீஸ்கந்தராஜா (செல்வம்) ஜெர்மனியில் அகாலமரணமடைந்தார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 17, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூரில் 9 - 10 - 88 ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வில்லூண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி அ. அப்புத்துரையும் பிள்ளைகளும்
17, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்.
(உமா அச்சகம் அருகில்) (6961)

### திருமதி அமிர்தகௌரிநாயகி கனகசபாபதி

திருமதி அமிர்தகௌரிநாயகி கனகசபாபதி (டாலி) காலமானார். இவர் மகாஜனக் கல்லூரி, சோமஸ்கந்தா கல்லூரிகளின் முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதியின் அன்பு மனைவியும் மணிவண்ணன், மணிமொழி, மணிமாறன், மணிவிழி ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 8 ஆம் திகதி சனிக்கிழமை ரொறங்டோ கனடாவில் நடைபெறும்.

தகவல்:
கு சிவகணநாதன்
33, மேரிஸ் ரோட்,
கொழும்பு -4, (6958)

### திரு. அருணசலம் பொன்னம்பலம்

திரு. அருணசலம் பொன்னம்பலம் 6–10–1988 அன்று காலமாகிவிட்டார். இவர் ந. மனோன்மணி, மு. கமலாவதி பொ. சிவஞானசேகரம், வி. மகேஸ்வரி சி. திலகவதி. ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நடராசா, முத்துலிங்கம், தனபாலதேவி, விசுவலிங்கம், சிவபாதசுந்தரம் ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 8 10-88 சனிக்கிழமை அன்று மாலை மூன்று மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு செம்மணி மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறுபணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்:
கி பாலசுந்தரம்.
41/3 செம்மணி ரோட்,
யமுனரி ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(6963)

### ஆசீர்வாதம் அகஸ்ரீன்
(அழகு)

ஆசீர்வாதம் அகஸ்ரீன் 06- 10- 88 அன்று காலமானார். இவர் காலம் சென்ற ஆசீர்வாதத்தினதும் சொர்ணம்மாவினதும் அன்பு மகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் அலோசியஸ் (Volanka Ltd (Colombo), அழகம்மா ஆகியோரின் சகோதரரும், விஜயரட்ணம், விமலேந்திரன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), பாலேந்திரன் (சவூதி அரேபியா), லதா (கனடா), ஜெயலதா (யாழ் பல்கலைக்கழகம்), ஜூலியற், சித்திரா, சுதா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜொய்லின், ஜெயராணி, ஜேயன் (கனடா), துரை ஆகியோரின் அன்புமாமனாரும் நீலுஷா, விஜேத் (கனடா), ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார். அன்னாரின் ஈமககிரியைகள் 7- 10- 88 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3. 00மணிக்கு நடைபெற்று பூதவுடல் யாழ்/ புனிதகொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
A. R விமலேந்திரன்,
(Bank of Ceylon. Jaffna),
இல. 7/3, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (7151)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 07- 10- 1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Friday 7th October 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org